Registered as a News paper in Ceylon

JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY 10 JUL 1972

விலை சதம் 20


# ஈழநாடு

வாரமலர்

மலர் 14 | ஐ. அவ் 27 | ஆனி 26 | ஞாயிற்றுக்கிழமை | (9—7—72) | இதழ் 149







### தமிழ்நாடு சம்பவங்கள் குறித்து

# கலைஞருடன் பிரதமர் இந்திரா தொலைபேசியில் பேசினர்

## அமைதி நிலவுவதாக முதல்வர் அறிவிப்பு



சென்னை, ஜூலை 8

தமிழ்நாட்டில் கடந்த சில தினங்களாக நடைபெற்ற சம்பவங்கள் குறித்து பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமிழ்நாடு முதல்வர் திரு. மு. கருணாநிதியுடன் நேற்றிரவு அவசரமாக தொலைபேசியில் பேசினர்.

முதல்வர் திரு. கருணாநிதி பிரதமருக்கு தமிழ்நாட்டில் நடைபெற்ற சம்பவங்கள் யாவற்றையும் விளக்கிக் கூறி தற்போது நிலைமை சுமுகமடைந்ததாகவும் மாநிலத்தில் அமைதி நிலவுவதாகவும் கூறினர்.

மேலும் முதலமைச்சர் கருணாநிதி கடந்த புதன் நடைபெற்ற பொது வேலை நிறுத்தம் பற்றியும், தமிழ்நாடு விவசாயிகளின் கோரிக்கைகள் பற்றியும் விபரமான ஒரு கடிதத்தை பிரதம மந்திரி காந்திக்கு எழுதியுள்ளார். தமிழ்நாடு அரசு ஏற்க்கூடிய கோரிக்கைகள் பற்றியும் ஏற்கனவே அளித்துள்ள சலுகைகள் பற்றியும் இதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சாரக் கட்டண உயர்வை மத்திய அரசே விதிக்கும் படி கூறும்போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினர் அதனை எதிர்ப்பதனைப்பற்றி கருணாநிதி ஆச்சரியம் தெரிவித்துள்ளார். சுதந்திரா ஸ்தாபனக் காங்கிரஸ் ஆகியவற்றுடன் இந்திரா காங்கிரஸ் கட்சியும், பாரத கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்த கிளர்ச்சி செய்வதைப் பற்றியும் நிருபர்களிடம் ஆச்சரியம் தெரிவித்தார்.

விவசாயத் தலைவர்களைத் தாம் சந்திக்க விரும்பவில்லை எனக் கூறுவது தவறு என்றும் அவர்கள்தான் தம்மை சந்திக்க மறுத்தனர் என்றும் அவர் நிருபர்களிடம் கூறினர்.

### காங்கிரஸ் குழு ஆராயும்

தமிழ்நாட்டில் விவசாயிகள் கோரிக்கைகளையொட்டி நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தின் போது நடைபெற்ற ... பிரச்சனைகள் சம்பந்தமாக நேரடியாக ஆராய்வதற்கென அகில இந்திய காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டுக்கு குழுவொன்றை அனுப்ப முடிவு செய்துள்ளது.

### குற்றச் சாட்டு

தமிழ்நாட்டில் கடந்த புதன் கிழமை ஏற்பட்ட சம்பவங்களுக்கும் மரணங்களுக்கும் முற்றிலும் தமிழ்நாடு அரசுதான் காரணம் என்று ஸ்தாபன காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் கூறியிருக்கிறார். இன்று அவர் விடுத்த ஓர் அறிக்கையிலும் விவசாயிகளின் அடிப்படைப் பிரச்சனைகளை ஆராயாமல் அவர்களின் கோரிக்கைகளை அரசியல் பிரச்சனையாக்கி விட்டார்கள் என்று திரு. காமராஜ் குற்றம் சாட்டினர்.



# பேச்சினல் மக்களை ஏமாற்ற முடியாது

— அமைச்சர் பீலிக்ஸ்

(நமது நிருபர்)

அரசுப் பேரவையில் பேச்சினாலும் விவாதத்தினாலும் மக்களை ஏமாற்றமுடியாது. நாட்டில் என்ன நடைபெறுகிறது என்ன நடக்கப்போகிறது என்பதுபற்றி அறியவே அவர்கள் ஆவல்கொண்டு

(12-ம் பக்கம் பார்க்க)

## தமிழர் கூட்டணி கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் ஞாயிறு

இன்று நடைபெறவிருந்த தமிழர் கூட்டணிக் கூட்டம் இம் மாதம் 16- திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கூட்டம் வைப்பதற்கான அனுமதி பத்திரம் கிடைத்த படியால் இன்று கூட்டம் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் ஒன்றும் செய்யவில்லை. யாதலால் கூட்டம் ஒத்திப் போடப்பட்டுள்ளதாக கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## இருவர் பிணையில் செல்ல அனுமதி

(நமது நிருபர்)

குடியரசு தினத்தில் குழப்பம் விளைவித்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் இருவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

# முஜிபுர் - பூட்டோ சந்திப்பு இந்தோனேஷியாவில்!

கராச்சி, ஜூலை 8

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜுல்பிகார் அலி பூட்டோவும் பங்களா தேசப் பிரதமர் ஷேக் முஜிபுர் ரஹ்மானும் இந்தோனேஷியாவில் சந்தித்துப் பேசுவார்கள் என்று கராச்சி பத்திரிகை போன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

அடுத்த வாரம் பாகிஸ்தான் தேசிய சட்டமன்றம் கூடி பாகிஸ்தான் அதிபரும் இந்திய பிரதமரும் சிம்லாவில் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அங்கீகரித்தபின்னர் இரு தலைவர்களும் சந்திப்பார்கள் என்று அப்பத்திரிகை எழுதியுள்ளது.

தேசிய சட்டமன்றக் கூட்டத்தின் பின்னர் ஜனாப் பூட்டோ இந்தோனேஷியாவுக்கும் புறப்படுவாராம்.


கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

## பரிசளிப்பு விழா

10-7-72 திங்கட்கிழமை பி. ப. 6-30 மணி.

பிரதம விருந்தினர்-
திரு. அ. வி மயில்வாகனம் அவர்கள்
(இலங்கை பரீட்சை வெளியீட்டுத் திணைக்கள உதவி ஆணையாளர்)

பரிசில் வழங்கல்-
செல்வி ப. ஆறுமுகம் அவர்கள்
(அதிபர், வேம்படி மகளிர் கல்லூரி)

பெற்றோர், பழைய மாணவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோப்பாய், 6-7-72. | அதிபர், ஆசிரியர், மாணவர்

4283

# நெஞ்சத்தை நிறையவைத்த பரமேஸ் - கோணேஸின் மெல்லிசை விருந்து!

மணி ஏழு. நிகழ்ச்சி ஆரம்பமாகிறது. நமது நாட்டில் குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு நிகழ்ச்சி தொடங்குவதென்பது இலகுவாக நடக்கக்கூடிய காரியமல்ல. திருமணத்திலிருந்து பொது வைபவங்கள் வரை இழுபடிக்காமல் நடந்துவிட்டால் அது ஒரு பெரிய விஷயமாகத்தானிருக்கும். கோணமலை பரமேஸ் - கோணேஸ் மெல்லிசைக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் வீரசிங்கம் மண்டபத்தில் செய்தது முதலாவதாகக் குறிப்பிட வேண்டும்.

இசைகளைக் கேட்கிறோம். இங்கே பேதத்தைக் காண முடியவில்லை. இனிமையைக் காண்கிறோம். துன்பத்தையே மறந்து லயிக்கிறோம்.

காரைக் கண்டுபிடித்தவரைவிட அவர் கண்டுபிடித்த காரை வேறு சில புதிய கருவிகளைச் சேர்த்து சிறப்பாக ஓடச்செய்துவிடுகிறார் கற்றவர். இதே கோலத்தான் மூங்கிலில் இருந்து இசை பிறக்கிறது என்று முதலில் சொன்னவரைவிட புல்லாங்குழலில் புதுப்புது ராகங்களை வாசிப



கவியரசு சொர்ணலிங்கம் பரமேஸ், கோணேஸ், மகேஸ் ஆகியோருக்குப் 'ஈழத்து மெல்லிசை மன்னர்' என்ற பட்டத்தை யாழ். மக்கள் சார்பில் வழங்கி கௌரவிக்கிறார். கடந்த மாதம் 24, 25-ம் திகதிகளில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இவர்களது 'இசைத்தென்றல்' நிகழ்ச்சியின் போது இப்பட்டமளிப்பு இடம் பெற்றது.

## கணேஷ் - ராஜ்

இரண்டு மணித்தியால நிகழ்ச்சிதான். 'இசைத் தென்றல்' தென்றலாகத் தான் மிதந்துவந்தது. இன்னும் அந்தத் தென்றலில் சுகமாய்ச் சோமா என்று நினைக்கும்போழுது மணி ஒன்பதாகிறது. யாழ். வீரசிங்கம் மண்டபத்தைவிட்டு வெளியேறவேண்டிய நிலை ஏற்படுகிறது!

இலங்கையிலுள்ள தமிழர்கள் இவ்வளவு முன்னேறிவிட்டார்களா? - முயன்றும் எதுதான் முடியாது.

### குறுகிய நெஞ்சம் சிலருக்கு

மட்டக்களப்பு, வவுனியா யாழ்ப்பாணம், திருக்கோணமலை இப்படி 'ஏதேதோ' காரணங்களைக் கூறி கூறுபோட விரும்பும் சில குறுகிய நெஞ்சங்கொண்டவர்களை பரமேஸ்-கோணேஸ் மகேஸின் இணைந்த இசைமுழக்கம் சிறிது சிந்திக்கவைக்கத்தான் செய்யும். காதுகொடுத்த பலரை தரமான ரசிகன் பாராட்டத்தவறுவதில்லை.

கலையும் முழுமையைத் தேடி நடக்கவைப்பதுதான் ஒருவரதுவேலையாக இருக்க வேண்டும். ஆனால் சிலர் முடமாக்கிவிட்டு மூலையில் குந்து எப்படி வேலை என்று முட்டாள்தனமாக சிந்திக்கிறார்கள். இது ஈழத்து தமிழர்கள் சிலரது ஊறிப்போன ஒரு கலை.

இதற்கு அப்பால் நின்று பரமேஸ் கோணேஸ் எனும் இளம் சகோதரர்களின் இசையை ரசிக்க முற்படுவோம்.

"உலகுக்குத்தெரியுமா நான் உன்னை நினைப்பது"-பரமேஸ் மேடையில் பாடுகிறார்; தம்பி கோணேஸ் வலது கரத்தையும் இடது கரத்தையும் மெதுவாக மேலும் கீழுமாக இசைக்கிறார். பின்னணிக் கலைஞர்கள் இயங்குகிறார்கள். பின்னணி இசை பிறந்து தென்றலாகத் தவழ்கிறது. கோணேசுக்கு வயது 22 வயதுதானிருக்கும். அதற்குள் இசையைக் கட்டுப்படுத்தி வளர்க்கும் கலையை நன்கு கற்றுக் கொண்டுவிட்டார் என்பதை இசையமைப்பு நன்றாக வெளிப்படுத்துகிறது. அசைந்துவரும் தென்றலில் குலிளாய பாடும் பரமேஸ் இளம் உள்ளங்களில் ஏதோ ஒரு தாகத்தையெல்லாம் உண்டாக்குகிறார். இளம் உள்ளங்கள் அலராத இனிமையான குரலால் இளகச்செய்கிறது. பொருளுள்ள பாடல் நல்ல இசையோடு வாடும்பொழுது அதன்நோக்கம்நிறைவேறத்தான் செய்கிறது.

### வேகம்

நடனம், இசை இவற்றிலெல்லாம் இப்போது வேகம் தேவைப்படுகிறது என்பதை இந்த இசைக்குழுவினர் நன்கு தெரிந்திருக்கிறார்கள் என்பதை அவர்களது நிகழ்ச்சி நன்கு வெளிப்படுத்தியது.

## கலை அரங்கம்

உலகத்தின் வேறொரு மூலையைத்தெரிந்துகொள்ளாமல் 'பழமை பழமை' என்று நேரத்தை வீணாக்கிக்கொண்டிருப்பவர்களுக்கு இந்தக் குழுவினரின் இசைநிகழ்ச்சி ஒரு நல்ல மருந்தாகவே இருக்கும்.

### சாதனை

தாங்களே பாட்டியற்றி, இசையமைத்து, பாடி, மதுவின் மயக்கத்தை ஏற்படுத்தும் இந்தப் பரமேஸ் கோணேஸ் மெல்லிசைக்குழுவினரின் பாடல்களை அடிக்கடி வானொலியில் கேட்டு லயித்துப்போன ரசிகர்களுக்கு அவர்கள் பாட, நேரில் கேட்பதென்றால் எப்படியிருக்கும்? பரமேஸ் பாடும்போது கைதட்டு! பாடி முடியும் போது அப்ளாஸ் பூரணமான, முழுக்க முழுக்க இளங் கலைஞர்களை பக்கஇசைகளாகக்கொண்டு, இசைக்க

(9-ம் பக்கம் பார்க்க)

## நமது நூல்நிலையம்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பாலுமதியாத ஓர் இளம் பெண்ணின் தடைப்பட்ட கல்யாணத்தை நடாத்த வதற்கு அவருடைய அபார ஞாபக சக்தியும், தார்மீகத் துணிச்சலும் கைகொடுப்பதையும் நினைக்கும்போது உற்சாகம் கலந்த ஒரு திருப்தி, பெருமை நிறைந்த ஒரு பூரிப்பு எம்முள்ளத்தே ஏற்படுகின்றது.

கதைகளில் வருகின்ற நல்லவர்களின் இன்னல்கள் எம் இதயத்தை உருக்குமாறும்

அவர்களின் வெற்றிகள், எம் இதயத்தைக் களிக்கச் செய்யுமாறும்—

தீயபாத்திரங்களின் துரோகங்களும் கொடுமைகளும் எம் இதயத்தைக் கொதிக்கச்செய்யுமாறும்—

அவர்களின் வீழ்ச்சியைக் கண்டு நாம் திருப்தி அடையுமாறும்—

நல்லவர்களைப் பார்க்கும் போது, நாமும் இப்படி வாழமாட்டோமா?" என்ற ஏக்கம் எம்முள்ளே ஏற்படுமாறும்—

தீயவர்களைப் பார்க்கும் போது, 'இவர்களைப்போல் நாம் வாழவே கூடாது' என்ற வைராக்கியம் ஏற்படுமாறும்—

அத்தகைய பாத்திரங்களைப் படைத்து அவர்களைச் சுற்றிக் கதையைப் பின்னிய கதாசிரியனின் வெற்றி பூரணத்துவமடைகின்றது! இலக்கியப் பயன் நிறைவடைகின்றது.

இந்த வகையில் 'கடன்' ஆசிரியர் சொக்கன் மகத்தான வெற்றி ஈட்டியுள்ளார் என்றே சொல்லத் தோன்றுகின்றது.

இறுதியாக- நல்ல சிறுகதை எப்படி இருக்கவேண்டும்? என்று யாராவது கேட்டால், அதற்கு வரைவிலக்கணந்தேடி மண்டையை உடைத்துக் கொண்டிராமல் 'சொக்கன்' எழுதிய "தாய்க்காரச் சாமியார்" போல்; "குரு" போல்; "ஆசிரியர்" போல்; "பிரிவாகிலை" போல்; "இருவரும் அழுவார்" போல், "உறவு முறை" போல்— இருக்கவேண்டும் என்று சுலபமாகச் சொல்லிவிடலாம்; யாரும் எதிர்ப்பார்களோ என்ற அச்சமோ ஐயமோ இன்றிச் சொல்லிவிடலாம்.

-சிற்பி-

['கடன்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டுவிழாவன்று 'சிற்பி' நிகழ்த்திய ஆய்வுரையின் சுருக்கம் இது.]

திரு ச. அம்பிகைபாகன் எழுதிய பேசுக சுவாசக் நூலுக்கு 'ஈழநாட்டில்' விமர்சனம் எழுதியவர் சொக்கன். கிருஷ்ணபிள்ளை, வெளியீடு: யாழ் சண்முகநாதன் அச்சகம்.

உங்களுக்குத் தேவையான
★ பால்மா வகைகள்
★ மருந்து வகைகள்
★ சாய்ப்புச் சாமான் வகைகள்
★ "சூட்கேஸ்" வகைகள்
★ பிளாஸ்டிக் சாமான் வகைகள்
மற்றும்
பரிசுப் பொருட்களும்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.
வீரவாகு அன்கோ
1, புதிய மத்திய சந்தை — யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி வீதி)

## இரண்டாம் பாகம்

(7)

வீதியை வெறிக்கப் பார்த்தபடி கடையிலிருந்த நேரமாகத் துரைராசா அமர்ந்திருக்கின்றான். மனத் தவிப்பின் தாக்குதல்களை அவனுல் சிறிதளவேனும் தாங்கமுடியாதிருக்கின்றது.

நேரமோ இரவு ஒன்பது மணிக்கு மேலாகின்றது இன்னும் மணியத்தின் கார் திரும்பவில்லை. இனுவிலில் இருந்து உடுப்பிட்டிக்குக் காரில் போவதென்றால் கூடிய பட்சம் இருபத்தைந்து நிமிடங்களே எடுக்கும் அதுவும் மணியம் போன்ற டிரைவர்கள் ஓடினாலும் இருபது நிமிடங்களே செல்லும் இந்திரா வைக்கொண்டுபோய் வீட்டில் விட்டுவர மணியத்திற்கு இவ்வளவு நேரம் தேவையா?

இனந்தெரியாத ஏதேதோ சந்தேகங்கள் எல்லாம் இதயத்தில் எழுகின்றன ஒரு வகைப் பொருமை உணர்வும் அவனுள் இழையோடுகிறது.

## பரிசு நாவல்

# போராடப்பிறந்தவர்கள்

செங்கை ஆழியான்

மணியத்தின் காரில் இந்திராபோனது உண்மையில் அவனுக்குப் பிடிக்கவில்லை. வழக்கமாக ஏற்றிச் செல்லும்கார் வரப்பிந்தினுல் அவள் சற்று நேரம் நின்றிருக்கலாம். மணியத்தின்கார் புறப்பட்டுச் சென்ற பத்து நிமிடங்களின் பின் இந்திராவை ஏற்றிச்செல்லும் கார் வந்துபார்த்துவிட்டுப் போனது.

"தம்பி..." என்று யாரோ அழைக்கிருர்கள் துரைராசா நிமிர்ந்து பார்க்கிருன்.

பரமகுருவின் மாமன் நிற்கிருர். அவர்தான் அக்கடையின் உரிமையாளர் சென்ற மாத வாடகைப்பணத்தை அவன் இன்னமும் கொடுக்கவில்லை. அதற்காகத்தான் வந்திருக்கிருர்.

"இன்னும் ஒரு இரண்டு நாளிலைதாறன் மாருமோ..." என்கிருன் துரைராசா.

"தம்பி, உது சரியில்லை இப்ப எத்தனை தவணைகள் சொல்லிவிட்டாய்? மயிலை

## இன்று

களத்திற்காகவும் ஐயாத்துரை அண்ணைக்காகவும் தான் நான் கடையைகளைக் குத்தகைக்கு! உனக்குக் கடை நடத்தச் சரிப்பட்டு வராவிடில் கழிவிடு... நல்ல வாடகைக்குப் பலர் இரவும் பகலும் திரிபினம்..."

அவரைத் துரைராசா ஏறிட்டுநோக்குகிருன். அவர் தொடர்கிருர்.

"கடைத் தவணைகளுக்கு நீ இல்லைபோவிட்டு வாங்கி வைவி!... அதைத்திருப்பித் தாறம்... ஆயிரம்ரூபா அட்வான்சையும் திருப்பித்தரவா!... வாடகை ஒழுங்கா கத்தரச் கஷ்டம் என்றால் சொல்லு! ஒரு மாதத் தவணை தாறன்..."

அவர் போய்விடுகிருர்.

துரைராசா மெதுவாகச் சிரித்துக்கொள்கிருன். கஷ்டங்கள் தொடர்ந்து வரும் போது சிரிப்பதைத் தவிர என்ன செய்வது?

ஒன்பதரை மணிக்குத்தான், மணியத்தின் கார் திரும்பிவருகின்றது. காரை "செட்"டில் விட்டுப்பூட்டிவிட்டு, துரைராசாவின் கடைக்கு வருகின்றான், மணியம். அவனது முகத்தில் என்றுமில்லாத மகிழ்வு குடியிருப்பதாகத் தெரிகிறது. கண்களும் சிவந்திருக்கின்றன.

"என்ன, துரைராசா, கடைபூட்டவில்லையே?" என்று அவன் கேட்கிருன்; சாராயநெடி மூக்கைத்துளைக்கிறது.

"இல்லை... ஏன் இவ்வளவு நேரம்?..."

"ஓ... அதுவா? இந்திராவை வீட்டிலை விட்டுவிட்டு வாற வழியிலை ஒரு சவாரி அம்பிட்டுது... சாவகச்சேரிக்குப் போய்விட்டு வந்தனுன்...!"

துரைராசாவின் மனம் ஓரளவு ஆறுதலடைகிறது. மணியம் பீடி ஒன்றைப் பற்றியபடி தொடர்கின்றான்.

"நீ ஏனப்பா, வீட்டிற்குப் போறதில்லை? உன்ரை மனிசி மிகவும் கவலைப் படுகுது. அழாத குறைதான்..."

கவலைப்பட வேண்டிய இடத்தில் கண்ணீர்விடாது, எங்கோ கவலைப்படுகிருள்? என் மனைவியின் கவலையை எடுத்துக்கூற மணியம்யார்? மணியம் தன்னுடைய வாழ்வில் குறுக்கிடுவதை இந்தவிடயத்தில் துரைராசா வெறுக்கிருன்.

"ம்..." என்கிருன்.

"நான் வாறன்..." என்று மணியம் புறப்பட்டுச்செல்கிருன்.


'என்ன வாழ்க்கை' என்று சலித்துக் கொள்கிருன், துரைராசா.

முதலாம் ஆட்டம் சினிமா முடிந்து மூழ்ப்பாண பக்கம் இருந்து. பலர் சைக்கிளில் வருகிருர்கள். துரைராசாவின் கடையின்முன் சைக்கிள்களை நிறுத்திவிட்டு, தேநீர் குடிப்பதற்காகக் கடைக்குள் நுழைகிருர்கள். அவர்களுக்கு பரமகுருவும் காணப்படுகிருன்.

(11-ம் பக்கம் பார்க்க)


# பலதிறப்பட்ட பாவனைக்கு...

துண்டுப்பலகைகள் வீடு, காரியாலயம், தொழிற்சாலை ஆகியவற்றின் எல்லாத் தேவைக்கும் எங்கும் உதவுகிறது.




பாரம் குறைவான, கவர்ச்சிகரமான துண்டுப்பலகைகள் மகிழ்ச்சிகரமான, மலிவான தளபாடங்களைச் செய்வதற்கு உதவுகின்றன.

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்,
420, பௌத்தலோக மாவத்த, கொழும்பு-7
தொலைபேசி; 95846—92903—95268—92619
19, ஸ்ரான்லிரோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 598 யாழ்ப்பாணம்.


## சிறுகதை

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

'இந்த மாதத்திலேயே ஒருநாளெடுப்பது நல்ல தென்று நினைக்கிறேன் என்ன யோசனை பொருத்தம் ஏதாவது பார்க்கவேண்டுமென்று நினைக்கிறீர்களோ? இல்லை இல்லை உங்களுடைய மனப் பொருத்தமே எங்களுக்குப் போதும் "என்று ஆரும் இதற்கு மாறுபட்ட சுப்பம்மான் என்றார் மாணிக்கம் வெட்கப்பட்ட சுப்பம்மாளை விமலத்தார் விழித்து 'அம்மாளை நான் என் வாழ்க்கையிலே மறக்கமாட்டேன். அம்மாள் இருக்க இதோ இப்பொழுது ரூபா 500 தருகிறேன் மிகுதி நாளெடுத்தபிறகு பார்க்கலாம் என்றார்.

என்ன விடுங்க இனி நீங்கள் சம்மந்திகளாகிவிட்டீர்கள். இப்பவே நாளெடுக்கலாம். பஞ்சாங்கத்தைக் கொண்டுவாருங்கள் என்றார் சுப்பம்மான், உடனே பஞ்சாங்கம் வந்தது. சிவலிங்கத்தைப் பார்த்த சுப்பம்மாள் பிள்ளையினுடைய நட்சத்திரம் என்னவென்றார் 'ஆயிலியம்' என்றார் சிவலிங்கம்.

ஏனென்றால் பெண்பிள்ளைப் பிள்ளை இருவருடைய நட்சத்திரத்தையும்பார்த்து அவர்களுக்குப் பொருத்தமான நாளெடுக்கவேணும். அதுசரி நானும் சும்மா இருந்துவிட்டேன், என்ன மாணிக்கம் பெண்ணுக்கு எவ்வளவு சவுனிலே நகை போடவேனென்று சிவலிங்கம் சொல்லவில்லையே இது சுப்பரின் வழமையான கேள்வி.

கூடிய அளவு... என்று சிவலிங்கம் தொடங்கவும் விமலத்தார் இடைப்புகுந்து வேண்டாம் வேண்டாம் முக்குமின்னிகூடத் தேவையில்லை அட்டா இவ்வளவு பெருந்தன்மை வாய்ந்த மனிதர் உலகத்திலே ஆயிரத்துக்கு ஒன்றுகூட இருக்க முடியாது என்றார் மாணிக்கம்.

அது ஏதோ உங்கள் விருப்பம். எங்கே விமலத்தாரே நட்சத்திர மென்ன? என்ற சுப்பம்மானின் கேள்விக்கு விடையாக விமலத்தார் 'பூராட'மென்றார்.

'அது உங்களுடைய நட்சத்திரமல்லவா?' என்ற சுப்பம்மான் தம்பியினுடைய நட்சத்திரம் என்றார் விமலத்தார் விழுந்து விழுந்து சிரித்தார்.

"ஏனையா சிரிக்கிறீர்கள்" என்றார் மாணிக்கம், "சிக்கரமாக வேறென்ன செய்வதாம். இந்தச் சுப்பம்மான் நல்ல காரியங்களைச் செய்யும் பொழுது சில சமயங்களிலே தன்னையே மறந்துவிடுவிருர். இப்பொழுது தம்பியினுடைய நட்சத்திரத்தைக் கேக்கிருரே" என்றுகூறியபடியும் சிரித்தார். 'ஐயா கோபிக்கக்கூடாது. அதுதானே எங்களுக்குத் தேவை" என்றார் மாணிக்கம்.

விமலத்தாருடைய மனக்கிடக்கையை ஒருவாறு ஊகித்த சுப்பம்மான் விமலத்தார் முதலிலே தம்பியினுடைய விஷயத்தை முடிப்போம், அப்புறமாக உங்களுடைய விஷயத்தைக் கவனிக்கலாமென்றார்.

அப்பப்பா! பார்க்கவேண்டுமே விமலத்தாருக்கு வந்த கோபத்தை. படிப்புப்பலகை மீதிருந்த சுந்தபுராணம் விசிறியப்பட்டது. கண்கள் நெருப்பைக் கக்கக் கையை முஷ்டியாக்கி மேலே உயர்த்திச் சும்மா என்னட்டத்தில் இவ்வளவுநேரமும் நாடகமா நடத்திறும், மரியாதைவிட்டுப் பிச்சைப் பணத்தை வாங்கியிரு வளர்க்கும் நீ என்னை ஏமாற்றலாமென்று வந்தாயா? போடா வெளியே. மரியாதையாக என் பணத்தைத் தந்துவிட்டு என்று பொரிந்து தள்ளினுர்.

11-ம் பக்கம் பார்க்க

நாகம் ஸ்ரீவிமானம் எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா
(சுன்னாகம்) நடித்த
9-7-72 வரை தினசரி 4 காட்சிகள்
**குடியிருந்த கோயில்**

ராணி சிவாஜி கணேசன்-சாவித்திரி
(யாழ்ப்பாணம்) பாலாஜி- எம்.ஆர்.ராதா
தினசரி 4 காட்சிகள் மற்றும்பலர் நடித்த
**படித்தால் மட்டும் போதுமா**

லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00 இரவு 9-30
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடித்த
**பணத்தோட்டம்**

5-வது வாரமாக காட்சியளிக்கிறது
**வெலிங்டன்** (யாழ். நகர்) **லிடோ**
தினசரி பி. ப. 2-30 / மாலை 6-30 இரவு 10-00 / சனி, ஞாயிறு காலை 10-30
தினசரி காலை 10-00 மட்டும்
மற்றும்
**கெப்பிட்டல்** (கொழும்பு) **விளாஸா**
திரைகளில்
★ சிவாஜி ★ ஜெயலலிதா
★ பாலாஜி ★ நிர்மலா
★ சோ ★ கருணாநிதி ★ தேங்காய் சீனிவாசன்
மற்றும் பலர் நடித்தது.
ஜேயார் மூவிஸ்
**எங்க மாமா**
[ஈஸ்ட்மென் வர்ணச் சித்திரம்]

REGAL (Jaffna)
Daily 5-15 & 7-15 p m.
Tony Russel
in
FROM CAIRO
WITH LOVE

தினசரி பி.ப 2-00
இரவு 9-45
ஜெமினி [இரட்டை வேடங்கள்]
வீரப்பா, கே. ஆர். விஜயா
நடித்த
**சங்கமம்**
[கலர்]

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p m
Sat. Sunday 10-30
Jeffrey Hunter
in
MURIETA
(Eastman Color)

**பவானி சினிமா**
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
நடித்த
**குமரிப்பெண்**

**நியூ கலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி ஞாயிறு பி ப 2-30
சிவாஜி-கே ஆர் விஜயா
நடித்த
**ஊட்டிவரை உறவு**

**யாழ் தியேட்டர்**
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சரோஜாதேவி
நடித்த
**இருவர் உள்ளம்**

RAJAH (Jaffna)
Daily 10-30 a m 4-45
7-00 & 9-45 p m
Richard Harris As
A MAN CALLED HORSE
(Cinemascope & Color)

**இப்பொழுது திரையிடப்படுகிறது!**
**வின்ஸர் யாழ்ப்பாணம்**
தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்சங்கர்
★ ரவிச்சந்திரன்
★ சௌகார் ஜானகி ★ வாணிஸ்ரீ ★ நாகேஷ்
மற்றும் பலர் நடித்த
கே. பாலச்சந்தரின் மற்றுமோர் வெற்றிப்படைப்பு
**நான்கு சுவர்கள்**


# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு எதிரில் பிரதான வேம்படிக்கு அடுத்தாற்போல் விவசாய விதைத் திற்கு மிகவும் ஏற்ற 2 பரப்பு நிலம். விபரங்களுக்கு: லாலி, இன்வெஸ்ட் மென்ஸ், 6, பிரதான வீதி யாழ்ப்பாணம். 4843

C. L. 7491 தொடரிலக்கமுள்ள A 40 கார் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 153, பீச்றோட், யாழ்ப்பாணம். 4850

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் வீடு கட்டுவதற்கேற்ற இரண்டு பரப்பு விஸ்தீரணமான ஆறு காணித் துண்டுகள். கண்டி றோட் முகப்பாதை. கனகரத்தினம் மகாவித்தியாலயத்திலிருந்து இருநூறு யார் தூரம். செங்கட்டிநிலம், நல்ல தண்ணீர் தென்னை, பனை, மாமரங்கள் உள. விபரங்களுக்கு: லாலி இன்வெஸ்ட் மென்ஸ், பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7453 4845

# கேள்வி விளம்பரம்

## அச்சுவேலிக் கிராமசபை

1972ம் ஆண்டு ஆடிமாதம் 18ம் திகதி மு.ப. 10 மணிவரை கீழ்க் காட்டப்பட்டிருக்கும் வேலைக்கு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல் முத்திரை வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இவ்வேலைக்குரிய கேள்விப்பத்திரங்கள் 1972ம் ஆண்டு ஆடிமாதம் 17ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை எனது அலுவலகத்தில் வழங்கப்படும். ஒவ்வொரு வேலைக்கும் வைப்புப்பணமாக ரூபா 50/-ம் பத்திரப்பணம் ரூபா 10/-ம் இக்கந்தோரில் கட்டப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களை வேலை நாட்களில் கிராமசபை அலுவலகத்திலும், பகுதித் துறை நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்.

**வேலை விபரம்**

(1) பொன்னைத்தை ஒழுங்கை.
(2) ஜோன்ராசா வீதி.
(3) கந்தனூர் ஒழுங்கை.
(4) மூளக்கல் கட்டைடம்

வே. தம்புத்துரை J. P.
தலைவர்,
கிராமசபை,
அச்சுவேலி.

கிராமசபை அலுவலகம்,
அச்சுவேலி.
5-7-72. 4885


**வெல்லி சினிமா**
(பருத்தித்துறை)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி-சாவித்திரி
நடித்த
**அதிசயத்திருடன்**
தினசரி மாலை 4-30
சனி, ஞாயிறு 10-30.
John Phillip Law
in
DANGER DIABOLIK
(Technicolor)

**சாந்தி** சுன்னாகம்
தினசரி 6-30, 9-30
ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - பானுமதி
நடித்த
**காதல் ஜோதி**


கிளிநொச்சி கரிவலம்பாடு 2-ம் வாய்க்கால் 12 ஏக்கர் நெற்காணி குளத்திற்கு அருகில் விற்பனைக்குண்டு. கடித விலைமதிப்புடன் விண்ணப்பிக்கவும். ஆர். வி. டேவிட், 353 பழைய சோனகத் தெரு, கொழும்பு - 12. தொலைபேசி: 32867. 4851

எங்களிடம் 3" அல்கோன் ஜாப் எஞ்ஜின் [Alcon 3" Jap Engine Pump] பும் இன்னும் ஓர் பிறஸ் போட் 3" வில்லியேஸ் [Beresford 3" Villiers Engine Pump] பம்பும் விற்பனைக்குண்டு. திருச்செல்வம் அன் கோ, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம். 4852

நெற்காணியும் தோட்டக் காணியுமான 25 ஏக்கர், மாங்குளத்தில் விற்பனைக்குண்டு. தொடர்பு: சேர். ம. சிவப்பிரகாசம், இளைப்பாறிய ஆசிரியர், வசாவிளான். 4842

நாரந்தனை கஸ்தோரும் தெற்கு றோட்டில், கோவில் கன்னியாஸ்திரிமடம் பாடசாலை ஆகியவற்றிற்கு அண்மையில் உள்ள காணியும், கருவில் றோட்டில் காரம் பொன் புனித செபஸ்தியார் கோவில் பாடசாலை, சிறிய புஸ்பம் மடம் ஆகியவற்றிற்கு அண்மையில் உள்ள காணியும் விற்பனைக்குண்டு. மின்சாரவசதி உண்டு விபரங்களுக்கு: S. செல்வராசா - வழக்கறிஞர். 13, ஐந்தாம்குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 4844

கோழிக் குஞ்சுகள் இறைச்சிக்கோழி (புறைலர்) 1/10 சேவல் குஞ்சுகள் 25 சதம். பேடுக் குஞ்சுகள் 90 சதம் விற்பனைக்குண்டு. சேவல் பேடு சராசரி விற்கப்படும். தனிச் சேவல் குஞ்சுகள் மாத்திரம் 40 சதம் உங்கள் தேவைகளுக்கு ஏற்றவாறு ஒவ்வொரு 15-ம், 30-ம் திகதிகளில் தெவைப்படும் இடத்தில் விநியோகிப்போம். நம்பிக்கையான ஓடர்கள் எதிர்பார்க்கப்படும். விபரங்களுக்கு:- Rizka Farm. C/O Post Master, (Kesel Watta Post Office) Parathai Road, Korakkana, Moratuwa. 4856

எங்கள் வசம் 2 தயின் ரயின் ரில்லர் (9 Tine Tillers) கலப்பைகள் விற்பனைக்குண்டு. ஒன்று புதியது. திருச்செல்வம் அன் கோ. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4857

